போகர் நிகண்டு

ஆசிரியர்

வெங்கட்டராஜன்

மின்னிய தொகுப்பு

வசந்தகுமார் பிச்சைமணி

www.valluvarvallalarvattam.com

சவுக்காரப் பெயர் = சதாசிவம், வெண்சாரை, வண்ணான், உவர்க்காரம், சிற்பரை, வழலை, குருமுறை, உமையாள், ஈசன், அவக் காரம், வாத ஆதி, ஆதியாங் குடியானோன், கூர்மை யாளன், சுவக்காரம், சோமன், ரவி வன்னி, சுயம்பாகி சுத்தியானோன், சூலானோன், சுடலையாடி, சிருஷ்டி யாளன், வாதத்தின் தலைவன், வாதமுடிப்போன், அந்தகன், காந்தள் மலர், பவழம், பாதத்தோன், முத்தி, ஏமசீவன், மூர்க்கன்.

பூவழலை பெயர் = மூர்க்கன், தரணிநாதன், பூநீறு, பூமிநாதன், தீர்க்கன், ஒட்டச்சி, ஊசரம், வெள்ளை, பூசாரம், குசத்தி, அருக்கன், வேகத்தி, பூமிருது, சவுடு, வண்ணாத்தி, ஆதி முதல், குருச்சி, உரகன், காயகல்பம்.

நவச்சாரப் பெயர் = நவசித்தச்சாரம், ஜலக் கூர்மை, வாருதிக்கப்பால் வழங்கினோன், நவ அமுரி, அசுரன், மேகநாதன், வாதராசன், வாதசமானன், செயநீர்க்கர்த்தன், வாத சிரோமணி, சலக்குரு, அக்கினித்தீ, துரிசிமேல் குரு, விட்டுப்பட்ட நவச்சாரி, கடுஞ்சாரி, வாதத்தைச் சமக்கியுண்டோன், கெங்கா குணன். சத்தியுட்கூறாய் நின்றோன்.

சத்திச்சாரப் பெயர் = சவலச்சி, சக்கிலிச்சி, வாதச்சி, கன்னத்தி, சூத கண்டகி, காந்தாரி, பரச்சி, ஏதத்தி, சாரோகி, அசச்ச காச்சாரி, சுவர்ச்சாதி, எமனுடகுணத்தி.

எவச்சாரப் பெயர் = கருப்பி, எவச்சி, நவச்சி, திரணச்சி, எவசோகி, சூடிச்சி, புகை நீர்க்காதி, புவச்சி, காரணசத்தி, பூதிச்சி, சோவாரி, புலச்சி, கவர்ச்சி.

காசிச்சாரப் பெயர் = குப்பிச்சாரம், துரைச்சி, அணங்கன், பரங்கிக் கூர்மை .

ஏகம்பச்சாரப் பெயர் = ஏமத்தில் பிறந்தவள், ஏத்தமுள்ள கன்னி, லோக பேதி, அழகான துரைப்பெண், சிவப்பி, சூலினி, மால் தங்கை, தாது சத்துரு, இந்திரி, பொன் பிறந்த கன்னி .

சீனாக்காரப் பெயர் = வெண்காரி, படுகி, சீனி, வெள்ளச்சி, பாணிச்சி, குருச்சி, உப்புச் சத்துரு, வெண்பீலி, கடுஞ் சுன்னத்தி .

வெங்காரத்தின் பெயர் = உருக்கினம், சந்தானி, பொரிகாரி, குடோரி, ஆங்காரி, மணிக்காரி, டங்கணம், பொங்காரி, சரக்கு மித்துரு .

சூடன் பெயர் = சுடர்க்கொடி, தனிப்பண்ணை, மாடன், தீபக்கொடிச்சி, மாபக்தரூபி, தீய்க்கஞ்சி, மாசற்ற சோதி, வேடன், ஆடன், ஆலாத்திக்கற்பூரம், ஆப்தகேசரி, அதீதம்.

பச்சைக் கற்பூரப் பெயர் = பலகைப்பூரம், சந்திரன், உச்சை, கண்ணீராக்கி, ரவிக்கஞ்சி, கதளிப்பூ, மதிப்பூரம், மதன சாரி, குருவுக்காதி, முக்கண்ணிலொரு கண், வடிசோமன், சீதளமானோன்.

அமுரி உப்பின் பெயர் = ஆதாரமூலச்சாரம், உமுரியுப்பு, அமுரி, மூலவன்னி, தீச்சலம், சடவுப்பு, முமுரியுப்பு. சலக்கூர்மை, வஸ்துவுப்பு, காயசித்தியுப்பு, நமுரியுப்பு, சங்காரகாலத்துப்பு, லவணக்கடுங்கூர்மை.

கல்லுப்பின் பெயர் = கடல் குருவி, பாரையுப்பு, அன்னக்கூர்மை, அல்லுப்பு, அட்சயம், பிரோத்தம், அறுசுவையாதாரம், வேலைநீர், வெல்லுப்பு, முனிமூத்ரம், சவர்ச்சலம், மிருத்திய கெந்தம், நல்லுப்பு, தற்கால லவணம்.

பொட்டிலுப்பின் பெயர் = படைராசன், இணங்கன், பூநாதன், பூமிக்கூர்மை, புடலவணம், கருவாம்முப்பு, ஊழராவணம், அக்கினித்தீ, ஆண்மையுள்ளோன், புசங்க சத்துரு, நவச்சாரமித்துரு.

இந்துப்பின் பெயர் = சிந்தூர்த்தம், சைந்தவம், சந்திரவுப்பு, மதிக் கூர்மை, பனிக்கூர்மை, மதியுப்பு, சிலாலம், மதிப்பூர மித்துரு, பாண்டத்தில் சமைந்த உப்பு.

வளையலுப்பின் பெயர் = மணக்கூர்மை, குப்பிலவணம், காசுசங்கம், கஞ்சயிறு சங்கம், காய்ச்சு மண்ணில் கஞ்சகம், வேஷ்டகரம், தெல்லுப்பு, உருப்பட்ட பலகை, கண்டகி, கடுப்பு, நிலயலுப்பு. நெருப்புப்பு.

சவுட்டுப்பின் பெயர் = தர்ப்பரம், கலவணம், கார்முகம், அவுட்டுப்பு, மண்ணில் கூர்மை, அக்கினியின் கூர்மை, ஊழரத்தின் சாரம், தவுட்டுப்பு, ஷசாரவுப்பு, காய்ச்சு நீருப்பு, சரக்குகள் சத்துரு.

திலலவணப் பெயர் = சிவந்த நிறமாயிருக்குங் கண்டூழனம், புலால்போல் நாறும் போக்கான லவணம், தீக்கூர்மை, திலாச்சாரம், காருப்பு, கடுங்கூர்மை, கசக்கின்றவுப்பு, கறுப்புப்பு.

கெந்தி லவணப் பெயர் = அழுகல் நாறி, கூர்மை நாறி, பனியினுப்பு.

பிடாலவணப் பெயர் = சந்தானக் கூர்மை, மந்தார காந்தி, வணங்காத லவணம்.

சிந்துலவணப் பெயர் = கடுங்கூர்மை, சிறப்பாமுப்பு, கற்பாரலவணம், சிந்துச்சாரம், பாரையில் பனியால் விளைந்தவுப்பு, தற்பரத்தின் உப்பு.

காய்ச்சுலவணப் பெயர் = கார்மேகச்சாரம், தருவென்ற சாரம், பாங்ஷசாரம், மேகத்தின் தோயம், அவுப்பிக்காட்சி, அசங்காத சம்பூதம், அனித்தியவுப்பு, காசிலவணம்.

பொன்னம்பர் பெயர் = பட்சியெச்சம், மஷத்தில் செரித்த மலக்கணம், அட்சயராசன், சூதத்தைக்கத்தும் சூரன், கட்சயத்தின் வாசன், பறவை வச்ரம்.

மீனம்பரின் பெயர் = மீன்வயத்து வயிரம், கானமலப்பட்சி, அகப்பளித்த மச்சை, கறுப்பு செம்மீனின் வயிரம், ஊன்மலம், வாசம்.

கடல்நுரையின் பெயர் = கடலுக்குள்ளக்கினிச் சாலம், சமுத்திரத்தின் கோழம், வாருதியின்னஞ்சு, சலக்கனல், மக்கிய தீக்கட்டி, மீனஞ்சுவன்னி, மலசாகரம்.

துரிசின் பெயர் = சுடலையோன், நிறமுத்தன், நிஷ்களன், கங்காளன், ஆடுங்கூத்தன், நல்ப்பச்சை, ஆதிகுருநாதன், மால் மச்சினன், மந்தாரகெங்கையோன், பரசுபாணி, கருமேகன், பல்லுக்கேத்தான்,

கடுங்கூத்தன், காசாம்பு வர்ணத்தோன், கூத்தன், குலையோன், குன்றைவில்லி, கண்டர், சூதச்சத்துரு, கண்ணுக்குராசன்.

பொன்னிமிளையின் பெயர் = பொன் பிறந்த கெற்பத்தில் உற்பத்தி, சத்தி நாதம், கன்னியுடமாதநீர், மாட்சிகம், பொன்னிறமுதிர்ந்தோன், வெகுகாமி, பொன்னிற் சத்தி, சத்தியுட நமமெல்லாம் சொல்லலாம்.

நாலான (வெள்ளி) நிமிளையின் பெயர் = முதத்தரம், ரசிதமென்ற நிமிளை, கஞ்சமென்ற நிமிளை, லோக நிமிளை, காக நிமிளை, சடச்சி, சத்தி, சிற்பரி, வெள்ளச்சி, கருப்பி, நாதாந்தி, துரைச்சி, சுக்கிரன், சனி, தூய்மையாளன், மாருதி.

அப்பிரகத்தின் பெயர் = ஏம வர்ணம், சிகப்பு வர்ணம், கிருஷ்ண வர்ணம், சுவேத வர்ணம், இந்த நாலு நிறமாயிருக்கும் இதுகளுக்குப் பெயர். பூமிவிந்து, நாதம், மாவிந்து, அம்பரம், மகாப்பிரகாசி, கேசரம், பரையின்னாதம்.

நாலு தினுசு காந்தத்தின் பெயர் = (1) அரக்குக்காந்தம், (2) ஊசிக்காந்தம், (3) உருளைக் காந்தம்,(4) கல்க்காந்தம் ஆகிய இந்நாலு காந்தத்துக்கும் பெயர். காயசித்திக்குப் பாத்திரவான், சிவலோகச் சேவகன், பராபரம், அயசிலிடயீயமானோன், லோக சீவன், தரணி நாதன், சூதாங்குசம், நாதாந்தம், நவலோகத்துரட்டி.

கற்பூரச் சிலாசத்தின் பெயர் = காயசித்திச் சுன்னம், சலப்பிரிதிவி, கல்க்குரு, ஆத் தினுடவிந்து, குலசிலாமணி, காந்தியோன், சுன்னத்தோன், உபரசத்திலாதி.

கல்நாரின் பெயர் = கல்லுக்குள் சவளை, சிலைநாரு, அலநாரு, சிலாவிந்தம், ஆற்தீகம், கல்லின் காரம், அரவிக்கல்லு, சிறுனாரு, சிவப்புக்கல், சத்து, சுன்னம், உக்கிரம்.

சகஸ்திரபேதியின் பெயர் = சலத்தோடு, கல்லுயிர், மலைநாதம், கனல்வேதி, மலைக்கரு, செஞ்சிலை, சிலைக்கெந்தி, பொதியமலை விந்து, இமயமலைக் குறிப்பு.

கல்மதத்தின் பெயர் = கல்த்தீட்டு, கல்மலையினாதம், மலைத்துடக்கு, மலையின் மதம், மலைத் தூமை, மலைரெத்தம், மலை நஞ்சு, சிலையொழுக்கு, சிலைக்குள்தீட்டு, செந்நீர், சிலையினுடசுறோணிதம், கல்லுக்குள் சோரம், கல்க்காமி.

நீலாஞ்சனத்தின் பெயர் = கண்ணுக்குள்ளஞ்சனம், நீலசிலைச்சூதம், கல்லினீயம், லோகாஞ்சனம், சிலாஞ்சனம், சூத அஞ்சனம், வெற்பினஞ்சனம், குவட்டினீயம், செவ்வீரஞ்சனம், கிருஷ்ணவர்ண அஞ்சனம்.

கருங்கல்லின் பெயர் = விக்கிரகமான கல்லு, உருப்பட்ட சிலை, இந்திரம், நீலம், மேகத்திலுற்பவிக்கும் கல்லு, அந்திர மேகத்திலருள் சிலை, மந்திரமாம் கூடக்கல்லு, மாசித்தியான கல்லு

படிகக்கல்லின் பெயர் = படிகம், நீரம், செம்படிகம், நீலம், சேலொத்த வெண்கல், காஸ்மீரம், ஒளி, மாலைக்கல், மதிகரந்தி, நாதாந்தம் வளர்ந்தகல்லு, சத்தியுடன் கூறான கல்லு, வளையமென்றகல், பாலைச்சிலைக்கல்.

சுக்கான் கல்லின் பெயர் = சொரிக்கல்லு, ஊர்க்கல்லு, சுரூஷரக்கல்லு, மரிக் கல்லு, தழல்கல்லு, சுன்னக்கல், வங்கக்கல்லு, பொறிக்கல்லு, பூச்சாரல்கல்லு, பூமிக்குள் விளைந்தகல், பேராங்கல்லு, நெறிக்கல்லு, அமுக்ககத்துங்கல்லு, வெறிக்கல்லு .

ஈரக்கல்லின் பெயர் = மந்தாரக் கல்லு, மாங்கிழத்தின் சிலை, விந்தாரக் கல், கோழிக்கல், குறுஞ்சிலைக்கல்லு, கொந்தாரரெத்தக் கல், கொழுப்புக்கல்லு, சிவப்புக்கல்லு, சித்தக்கல்லு.

ராசாவர்த்தத்தின் பெயர் = மண்ணின் வத்தம், மலைமேகச் சொர்ணக்கல்லு, சித்தரசவாத அவதீதக்கல், தீர்மைக்கல், வாதத்தின் பிரட்டுக்கல், ராசாவின் அவத்தக்கல்லு, நீலக்கல், நிறுமைக்கல்லு, வாதத்தின் பேருமாம்.

கெருடபட்சிக் கல்லின் பெயர் = விஷத்துக்கரசன், வயின தேயக்கல்லு, விழராஜன், பட்சிராஜன், பால் போல் சிரசோன், படத்துக்காரூடன், கார்கோடன்,கலுழனாங்கல்லு.

ஓட்டின் பெயர் = பாண்டத்தி, குசக்கலத்தி, சில்லு, குசத்தி, தேசாந்திரி, செயலத்த மண்ணினோடு, மண்கலம், அழகாம் பாண்டம், புதுக்கலசம், சக்கரம் புகையுஞ் சூளை

செங்கலின் பெயர் = செஞ்சிலைக்கல், மணக்கல்லு, சிறந்த கல்லு. மங்கலக்கல், செம்பலகையுருக்குங் கல்லு, காளவாய்க்கல், சூளைக்கல், கோபுரக்கல், ஈட்டுக்கல், மண்கல், அங்கல்லு, செங்கல்லு, சிலையாங்கல்லு .

எலும்பின் பெயர் = சல்லியம், அஸ்தி, அங்கம், உயிரின் குரடு, வச்சிரத் தண்டு, வரிச்சங்கம், விலாக்கொடி, உயிரின் சந்து, விலாத்தோரணம், பல்லியம்.

மயிரின் பெயர் = கேசரம், ரோமம், குழை, கூந்தல், கதுப்பு, ஓதி, அளகம், கொந்தளகம், அஸ்திவேரு, மசகம், சிகை, தேசா சாபம், குஞ்சி, கேதகை, மாசாத்தின் கந்தம், கம்பிளி.

நண்டின் பெயர் = நரியுண்ணி, தலையில்லாச் சேவுகன், பத்துக்காலுடைய மன்னன், பருந்தினுக்கு விருந்தானான், பரம யோகி, கொத்துகின்ற குரடுவுள்ளோன், குளத்துக்குக் குருவியானோன், அலவன்.

நத்தையின் பெயர் = ஊமச்சி, உமுரி, நீர்க்காயம், கல்லொட்டி, குளத்துக்குள் ருத்திராட்சம், செலக்கூபம், உள்ளுயிரானோன், நீர்க்குன்று, கொம்பூதி, மேல்மூடி, ஊர்ந்து நிற்போன்.

நாகரவண்டின் பெயர் = பாம்பின் வாய்க்கிரையானோன், சங்கஞ்செடியில் குடிபுக்கி, சங்கின் காட்டுக்குள்ளுமுரி, காட்டுக்குள் சங்கு, பாம்புக்குத் தண்ணீர்கொடுப்போமன்னன், சுன்னத்தில் கூர்மையானோன்.

கிழிஞ்சியின் பெயர் = உடல் ரெண்டு உயிரொண்ணு, கடலுக்குட் பட்சி, ஓடம் உயிர், சிப்பி, சுண்ணத்தில் வலசாரி, குளத்துள் சிப்பி, மாசாரி, சித்த சிப்பி .

ஆமையின் பெயர் = அந்தரங்கத் தியானி, நீர்ப்பரிசை, தனித்தது, மோதிரன், அங்கமூடி, மௌனி, பஞ்சங்கம் கூர்மையுள்ளோன், கச்சன், கூர்மைராசன், மால்பிரதிஷ்டையுள்ளோன்.

முட்டையின் பெயர் = மும்மூர்த்தி, மஞ்சள் வெள்ளைக்கரு, கடுங்கார நீரானோன், நீத்துண்டை, ஊமை. உருளை, சுன்னத்துக் குயிரானோன், அண்டம், மெழுகுக்குக் கூர்மையானோன், சாரத்தின் சத்துரு, லோக பேதனம்.

ஆனைக்கொம்பின் பெயர் = செகப்பிடி, கரியின் கொம்பு, வாரணத்தின் கோடு, ஒளிர்மருப்பு, கிம்புரி கோடு, ஏயிரு, தந்தம், மதங்கத்தின்ராவு, குஞ்சரத்தின் கோடு.

பன்றிக் கொம்பின் பெயர் = வலைவாசி, வராக தந்தம், நிறமான கண்ணையுள்ளோன், தரணியைக் கிளையுங்கொம்பு, கருமா, ஏறுழி, கேழல், கானகத்தின் சேவகன், சூரன், கிரிட்டி, எரி, கீடம், போரம், குரோட்டன், போத்திரி, ஏனம்.

கலங்கொம்பின் (கலைமான்கொம்பு) பெயர் = சாரங்கம், அருணம், புள்ளிநிற மிருகம், சிங்கம், ஆணு, கடவிழி, சாதகலேடி, சாத்தம், கிருஷ்ண மிருகம், மணியொலியிற்சிக்கும்.

மாட்டுக் கொம்பின் பெயர் = மயிஷம், கருமேதை, கிடா, பசு, கோ, ஆ, சுரபி, விடை, எருது, ரிஷபக் கொம்பு, கருமயிடம், கார்கவரிக் கொம்பு, திடமுரியுங்கவசம், சேவு, வெண்பசுவுங் கொம்பு.

ஆட்டுக் கொம்பின் பெயர் = அசர், தகர், சாகம், சாளகம், மேஷத்தின் கொம்பு, சிம்போத்து, பெலரோசசாகி, ஓமப்பசு, காரணமாம் வுரு, பிரமம், கரியகுறுப்பாடு, செம்பிலி, விரகச்சாகம்.

பல்லின் பெயர் = கடைக்கவாதானம், தந்தம், தாள்வாய், சரக்கூடம், சாந்தமாம் பார்வை, தவளமுத்து, ஒலிக்கடல், சர முல்லை, நகை, முறுவல், பல், எயிறு.

பூ நாகத்தின் பெயர் = மேகத்தின் விந்து, சஞ்சீவி, சோதியமான வேதி, மாங்குளுத்தான், பூமிவேர், மாசிலாதான், ஆகாச தீபன், அமுதையூட்டுஞ் சத்து.

இந்திரகோபப் பூச்சியின் பெயர் = வெளுப்பு சிகப்பு கறுப்பாயிருக்கும், சந்திரபீசம், தனுப்பீசம், இந்திரனாம் பீசம், இடிபீசம், ரெம்பாச்சுறோணிதம், நாகபேதி, சஞ்சீவி.

செவ்வட்டையின் பெயர் = ஆயிரமாங்கதலி, வரிச்சுருளு, கானகத் தட்டான், குண்டலி, மண்திண்ணி, சத்துக்கானோன்.

தவளையின் பெயர் = மகாபேகன், கச்சதூஷன், ராசமண்டுகம், தத்தூரன், மண்டுகம், தண்ணீர், தவளையானோன், மேக வார்த்தையறிபவன், முத்தியகோஷ மூர்க்கன், சொரியோன்.

கோழியின் பெயர் = குக்குடம், வாரணம், ஞானி, சேவல், இரவையறிவோன், சண்முகற்கொடியோன், சண்டைக்குச் சூரன், சம்போகம் அடிக்கடி வேண்டி நிற்போன்.

கரடியின் பெயர் = வெண்பல்லம், வேகவுளி, தண்பல்லம், வல்லூகம், செங்கண், பாதாளவேதியானோன், பாம்புண்டசித்தன், புத்தைவுருஞ்சும் வேந்தன், மலைராசன், ஆதாளி மன்னன்.

சங்கின் பெயர் = தவளம், திசை நாதம், வளை, வலம்புரி, இடம்புரி, வாருதினாதம், சின்னம், பணிலம், பாணி, சலம்புரி, படசி, கம்பு, நீங்காதவோசையோன், சலஞ்சலம்.

முத்துச்சிப்பியின் பெயர் = மேகவர்ணன், துள்ளிவிந்து, சந்திரன் சீப்பு, தனித்து நின்ற சோதி, நீச்சோடம், வானத்தின் கெற்பம், அலங்கனாறி.

பவழத்தின் பெயர் = துகிர், துப்பு, வித்துருமம், வாருதிக்குள் தண்டு, செந்தண்டுக் கொடி, கன்னிசாத்தியமாலை, பிரவாளம்.

கோமேதகத்தின் பெயர் = கோமியவர்ணம், ராகு, மார்ச்சாலநேத்திரம், புலிக் கண், ஈயுகின்ற களிப்பாங்கல்லு, காதலிடு ஆபரணத் தேன் கல்.

புஷ்பராகத்தின் பெயர் = சுத்திரனாரத்னம், கேதுவுக்குச் சீலாங்கன், நயனத்தோன், கேதுவசூரன், தாதுக்களை, சலச்சீவன், சுடர்விளக்கும் பணி, மாலுடகண்டகன்.

வயிரத்தின் பெயர் = வருணன், சிலையில் வளர்ந்தோர், அருணகதிரோன், ஆதிநாராயணன், தருணரவிவிந்து, தளுக்குரு வான், சூரியன், சிலைராசன், தீபக்காந்தி.

பச்சையின் பெயர் = பசுங்களை, பசளை, பழம்பச்சை, புந்தியின் விந்து, ஆயியுடமேனி, கந்தி, கலைச்சி, இருளறுக்கும் ஒளியாரம், மாலினுடமேனி.

நீலத்தின் பெயர் = சனிவிந்து, அந்திரக்கண்மணி, அரிநிறக்கல், இந்திரம், தந்திரத்தின் மேகம், மேகச்சாய்கை, கத்தை முத்தக்கதிர்விரிக்கும்பணி.

சிவப்பின் பெயர் = மாணிக்கம், சொக்கம், செவ்வாயொளி ரத்னம், பறங்கி, ஊழிக்கனல் நிறம், ஊணி, வாணிச்சி மேனி, ஆதிக்கச் சிவப்பு, அரூபி, இருட்பருகும் கற்றை, வெயில் சீய்க்கும்.

வைடூரியத்தின் பெயர் = காந்தி. சேலொளி, பாணக்கல், உத்தகளை சாதகச் சூத்திரம், சிந்து சாதகச் சூத்திரம், சாதகச் சீவன், சாந்தக்கல், வெயில் வயிறுவைக்கு மணியாரம்,

கொண்டகச்சிலையின் பெயர் = குருஞ்சிலை, கூளான், கவுணியம், வாணலிங்கம், மாசற்ற லிங்கம், கருஞ்சிலைக்கல், சாதகநீர்ச்சிலை, சலாமேனி, மாருதிக்கெங்கை, முனிவர்கள் பூசித்த லிங்கம்.

சூடாலைக்கல்லின் பெயர் = மனோகந்தக்கல், அதிதனுரெத்தினம், நீடாலைக் கோடு, கல்னார்ச் சிலை, கொடிசிலனாகம், மணிச்சிகரப் பொருப்பு.

மாக்கல்லின் பெயர் = வல்லமாக்கல், மாச்சிலைமா, மேதச்சிலை, செந்தூரச் சிலமா, பலகையெழுதுங்கல்லு, குப்பிமாக் கல்லு, மூதண்டமுகடு, மோதிப்பொருப்பு.

தேக்கல்லின் பெயர் = செம்பாறை, செம்பொடி, சிலாகைநீர்க்கல், வம்பூரை, ஊஞ்சல்கல், புறைக்கல், வம்புக்கல், புரைபோக்குக்கல், சாதகக்கல், பிரையாங்கல், புத்தெளிரிருக்கைப்பொருப்பு.

மஞ்சக்கல்லின் பெயர் = குங்குமவர்ணி, கொடுங்கோபிச்சிலை, பசுமையாம்மலை, பொடிச்சிலை, சொறிப்புள்ளிக்கல், வாரியெழு பொருப்புக்கல்.

தவளைக்கல்லின் பெயர் = மண்டூகசீவன், நிசியில்தத்துங்கல், செரிக்கல், மாசக்கல், சித்தசாபக்கல், பகட்டுக்கல், வேர்ப்புக்குளடுத்த கல்.

சிலாவங்கத்தின் பெயர் = கடுவங்கச்சிலை, வங்கத்தின் கல், சுக்கான் பருவதம், வரைக்குடிலம், நஞ்சூகக்கல், மேகச்சிலை, தஞ்சுகம், கசிகாபு, காத்துச்சிப் பொருப்பு.

சிலாநாகத்தின் பெயர் = நாகசிலைக்கல், பொரிக்கல், மாகசிலைக்கல், பஞ்ச நிறக்கல், வாதகருக்கல், சித்தக்கல், தாகக்கல், உதய மணிச்சிகரப்பொருப்பு.

அன்னபேதியின் பெயர் = கல்னாதம், அன்ன காலன், கல்சவடுனாதம், களிம்பு, கல்லுவேகம், மலைவீரியம், திராவகத்துக் கடுங்காரபேதி, மலைருது.

அஸ்தியின் பெயர் = ஆகத்தைவுருக்கி நீராக்கி, எலும்புருக்கி, எலும்பை நீராக்கி, நாகத்தைச் சொர்ணமாக்கி, பாஷாணம் பவழ மாக்கி, வச்சிரத்தைத் தோயமாக்கி, காயத்தை யுருக்கி

சொர்ண பேதியின் பெயர் = குவடுதனிலுதித்தோன், குவட்டுக்குள் முலைச்சி, குகை நாதத்தி, குமரி, தங்கத்தைச் சலமாக்கி, மஞ்சள் நிறத்தி.

மாங்கிஷி பேதியின் பெயர் = மாங்கிஷத்தை நீராக்கி, மலை ருதுச்சி, கலையில் கடுங்காரி, கல்லுதனை நீராக்கி, காந்தாரி, கடுவுப்பு, உவட்டில் கூர்மை, வெர்ப்பிலுற்பத்தி .

உவர் மண்ணின் பெயர் = பூமிச் செருக்கம். மேதினி, சங்கினி, பூமாதா, வசுந்தரி, நாதம், காமி, தணலின் பூமி, களர் மண், பூமியுடகுரு.

கல் கிட்டத்தின் பெயர் = கிட்டச் சிலைக்கல், பறிக்கிட்டம், பாறை, செம்புவுரைக்கல், மறிக்கிட்டம், மறை. குமிள் கல், உயர் கட்டுக்கிட்டம், நகர்க் கிட்டம், நாறுங்கிட்டம்.

கரு மணலின் பெயர் = கருந்திரை, சுருட்டு மணல், கரையரைக்கு மணல், ஆத்துக்குள் நேர் மணல், மணல் குன்ற மருவி, காவேரி பரந்த மணல், அப்பிரக மணல், நீல மணல், ஒளி மணல்.

செம்மணலின் பெயர் = செம்பு மண், ராக மண், காவி மண், பாகு மண், பழுத்த மண், சித்திரமெழுது மண், களிம்பு மண், காந்த மண், தாம்பூரத்தின் மண், நளிர் மண், நாட்டு மண்.

சுத்த மண்ணின் பெயர் = செயமானபுட மண், குடோரி மண், பூமிக்குள் வெளுப்பு மண், காமண், பால் வெள்ளை மண், குமடை மண், கும்பிக்கு மண், சலவை மண், லோகத்தின் கசடறுக்கு மண்.

முடவாட்டுக்கால் பெயர் = மலைக்கால், குலைக்கால், குவட்டுக்கால், மேஷிக் கால், சலா மூன்றுக்குமித்துரு, மலையின் தொங்குகால், கருமேக்கெற்பக்காலாம், ஆட்டு முலைக்கால், திரிகிக் கால்.

கருவண்டின் பெயர் = கம்பிச்ச வீணை, கானகக் கீதம், செம்பி, கருப்பி, மதுவெட்டெழும்பி, விடாச்சுரும்பு, கதண்டு, தும்பி, கடக்கலுழி, அறுகால் வண்டு, களித்தேறல் வண்டு.

பன்றி முள்ளின் (முள்ளம் பன்றி) பெயர் = ஏனத்தின் முள்ளு, மூன்று வர்ணத்தி, கானகத்தில் சிந்து முன் பாஷாணம், உதறுகின்ற வராகி வேல், கேழல், குன்றினிற் கேழல்.

எலி முள்ளின் (முள்ளெலி) பெயர் = கானகத்தில் சேவகன், வளையில் குடியோன், பூனைக்குச் சத்துரு, ஊனொத்த முள்ளு சுண்டெலி, மோட்டெலி, முள்ளெலி, எலி.

கடல் நுரையின் பெயர் = காஷ்டம், அக்கினியின் சாலம், லோகத்தி நேயம், அக்கினி கெற்பம், அலைதனிலே திரண்ட தீ, வாருதியின் விந்து, நிரியாசம், பத்தவாக்கினி, சிந்துப்பிலவம், அதிகசுவாலம்.

மீனெலும்பின் பெயர் = முழுமுதற்கொட்டு, நீர்வாளையங்கம், மச்சத்தின் செல்லி, மகர மீனங்கம். தலை வாள், கச்சத்தின் அங்கம், உற்ற அறல், எதிர்ந்தேறும் வாளை, கமஞ்சூலவாளை.

முள்ச்சங்கின் பெயர் = முழக்கெடுக்கும். சூரச் சங்கம், கண்டகச் சங்கம், கதித்த சங்கம், கவரெமு சங்கம், உயன்றவேலச் சங்கு, உரோமத்தின் சங்கு, ஒற்றை வாகை, கூப்பிடுஞ்சங்கு.

பேறோசனையின் பெயர் = வேதைகெடுக்குங்கல், மாசித்தன் பிரட்டுக்கல், மலையிலுற்பவித்தமாமோசம், பசுமலைச்சரக்குழலூத்து, கிரிபருவதாரோணம், சிரிங்கிகோகிரி.

நாகப் பச்சையின் பெயர் = நாதாந்தி, மாயியுடமேனி, பரிசக்கிணறு, பருஞ் செம்பின் பச்சை, இரும்புச் செம்பாம், கானக்ககூபம், கடும்பச்சை, நதிதனிலேகதிக்கும் பச்சை, மலையருவியில் விடுபட்டது.

மரகதப் பச்சையின் பெயர் = மடும்பச்சைவர்ணம், மேகப்பச்சை, நடுப்பச்சை, நாயகி தன்மேனிக்கல், கடும்பச்சை, கானகத்தின் குவடு, கதிர்க்கும் பச்சை, திகிரிக்குள்ளடுக்கும் பச்சை.

புத்தான்பழத்தின் பெயர் = புத்துக்குள் குகைச்சி, கருப்பியாகும், முலைப்பாலி, கரடி மித்திரி, திரண்டுருண்ட கொடிச்சி, வெள்ளச்சி, விஷத்துள் வாசி, மகாசேனைக்கூடி வாழும்,

வெள்ளைச் சுக்கான் பெயர் = வெண்கல், நுணக்கல், வெளுத்தகல், வயல்கல், வங்கக்கல், நீறோட்டம் பாயுங்கல், சிரந்தாவிக்கல், சுயமாக விளையுங்கல், செழித்த கல், பொருமுக்கல், பூநீறுக்கல், பேய்க்கல்.

கதண்டின் பெயர் = கரிமுகவன் ஆனை, கானகத் தும்பி, வானகபூதச்சி, வச்சிரமாந்தலைச்சி, மாகுடிலைச்சி, பொற்புதையில் குடியிருப்பி, சித்தர் மகிழ்ச்சி, தேனகத்தின் குடிச்சி.

காகச்சிலையின் பெயர் = கருமுகிலின் தண்டுக்கல், காசிக்கல்லாம், மாசிக்கல், வானக்கல், மாருதவர்ணக்கல், திரணிக்கல், தாக சிக்கல், சனி பகவான் கல், தயங்காத உலூர் சிலைக்கல், பலி புத்திக்கல்.

காண்டாமிருகத்தின் பெயர் = காண்டகம், கொந்தளம், ஒற்றைக் கொம்பன், கையானை, கருஞ்சாளி, மருத்தீடு, விஷங்கள் போக்கி, பூயன், கண்டக நாக்கன். பெலாக் கிரமன் பேறுடையோன், அரசனுடைய உயிரைக் காத்தோன்.

கஸ்தூரி யெலும்பின் பெயர் = கடு அஸ்தி, புகழ் வாசச்செல்வி, வீணையாம் மிருகம், நலமான வுதிரத்தோன், மாங்கிழ வாசத்தோன், சாரி சாதகன், சாதகன், சுகந்தன், பூதகன், திலதன்.

மந்தாரச்சிலையின் பெயர் = மந்தார மேகவர்ணக்கல், பலவர்ணம் பாகக்கல், கனல்சிலை, பருதிக்கல், வார வருணம், சீவனிப்புடம், குலவரை மதிமேகக்கல், மாருதம், மேகம்.

கடல் பாசியின் பெயர் = கடு வேலைக்கந்தரமாம், காரும் சீவல், வாருதியின் பாசி, மன்னல், கரைக்கல்லோலம், கடலின் பாசி, திரைசுருட்டும் பாசி, சிறு நீர்ப்பாசி, செலமலம்.

சாலக்கிராமத்தின் பெயர் = மூவாக்கல். தாசி மலைக்கல், வனமலையில் தங்கம், கெற்பத்தில் மால் வீடு, மலையில் சக்கரம், விஷ்ணு வாசஞ்செய்யா நின்ற சாலக்கிராமம்.

மாகிஷச் சிலையின் பெயர் = சதை நிறம், சென்னிறம், சடை நிறம், வெண்ணிறம், உதநிறம், மானிறம், கார்னிறம், மதநிறம், மண்ணிறம், சிலைநிறம், பரங்கிச் சிலைநிறம்.

மாந்துளிர்க் கல்லின் பெயர் = ரவியினிறம், தேனிறம், தேன் துளிர்க்கல், தீப நிறம், சென்னிறம், கொக்கு மானிறம், மாதளம் பூநிறம், வலி நிறம், செலி நிறம், வம்புநிறம், திகிரிக்குள் கலந்த சிலை.

காஸ்மீரப் படிகத்தின் பெயர் = சிவதேகம், தேவிக்கு முத்திரை, திங்கண் மாலைக் கடைக்கண், செஞ்சடையோன், வச்சிர வேடம், பூமிக்கு நாயகன், மதிக்காந்தி.

கல் காவியின் பெயர் = துரவிச் சிலை, செஞ்சிலை, செந்துரமண் சிலை, செம்மண், காவி, ஆதிரவிச்சிலை, காந்தி அதிகமேனி, நாதாந்தி தரிக்குங்காவி.

செம்பு மணலின் பெயர் = சிவந்தலோக மண், செவ்வாய் மண், தாம்பூரம், கம்மிலேச்ச மண், குலப்பம், செம்பொடி, செங்கோலம், முதுபரமன், ரவிப்பிரியாமண்.

நாக மணலின் பெயர் = சுவர்ணத்தான், ஏமவிந்து, மின்னல் தளுக்கு, சீரலத்தான், தாசிப்புத்திரன், அஞ்சு வர்ணம், அழகாம் வாதி, அவநேஷ்டம், அசக்கியன், தார், சுத்தி மிருது, கிருஷ்ணம், சோரம்.

வங்க மணலின் பெயர் = வடிப்பிணையின் வங்கம், மாருதி நாதம், கொடுப்பிணை, அடிப்பிணை, குடிலம், சவளை, கோஷவங்கம், திரம்புவலி, நாங்க வங்கம், மாயூழம், பூதி, லோகம், அருப்பியம், கயப்பினை.

போகர் (பரிபாஷை) நிகண்டு அகராதி.

அ

அகப்பளித்த மஜ்ஜை = மீனம்பர்

அக்கினிகர்பம் = கடல் நுரை

அக்கினியின் ஜாலம் = கடல் நுரை

அக்கினியின் கூர்மை = சவுட்டுப்பு

அக்கினித் தீ = நவசாரம், பொட்டிலுப்பு

அங்கமூடி = ஆமை

அங்கம் = எலும்பு

அங்காரி = வெங்காரம்

அசக்யன் = நாகமணல்

அசங்காத சம்பூதம் = காசலவணம்

அசர் = ஆட்டுக்கொம்பு

அசுரன் = பூவழலை

அச்சசகாச்சாரி = சத்திச்சாரம்

அஞ்சுவர்ணம் = நாகமணல் (கனி)

அடுப்பிணை = வங்கமணல் (கனி)

அட்சயம் = கல்லுப்பு

அட்டுப்பு = சவுட்டுப்பு

அணங்கன் = காசிச்சாரம்

அண்டம் = முட்டை

அதிகஜ்வாலம் = கடல் நுரை

அதிதனுரத்னம் = சூடாலைக்கல்

அதீதம் = சூடன்

அந்தகம் = சவுக்காரம்

அந்திரமேகத்திலருள் சிலை = கருங்கல்

அந்தரத்தியானி = ஆமை

அந்தரக்கண்மணி = நீலம்

அப்ரகமணல் = கருமணல்

அம்பரம் = அப்ரகம்

அரசனுடைய உயிர் காத்தோன் = காண்டாமிருகம்

அரவிக்கல் = கல்நார்

அரி = பன்னிக்கொம்பு

அரிநிறக்கல் = நீலம்

அருக்கன் = பூவழலை

அருணக்கதிரோன் = வைரம்

அரூபி = சிவப்பு

அருப்பியம் = வங்கமணல்

அயசிலீடயீயமானோன் = காந்தம்

அலநாறு = கல்நார்

அருணன் = மான் கொம்பு

அலகம் = மயிர்

அலங்கநாரி = முத்துச்சிப்பி

அலைதனிலே திரண்டதீ = கடல் நுரை

அல்லுப்பு = கல்லுப்பு

அவநேஷ்டம் = நாகமணல்

அவக்காரம் = சவுக்காரம்

அவுப்புக்காட்சி = காசலவணம்

அமுதையூட்டுஞ்சத்து = பூநாகம்

அழகான துரைப்பெண் = ஏகம்பச்சாரம்

அழகாம்பாண்டம் = ஒடு

அழகாம்வாதி = நாகமணல்

அமுக்கக் கத்தும்கல் = சுக்கான்

அமுகல்நாரி = கெந்திலவணம்

அறுகால் வண்டு = கருவண்டு

அறுசுவையாதாரம் = கல்லுப்பு

அனித்திய உப்பு = காசலவணம்

அன்னக்கூர்மை = கல்லுப்பு

அன்னக்காலன் = அன்னபேதி

அக்ஷயராசன் = பொன்னம்பர்

அஸ்தி = எலும்பு

அஸ்திவேர் = மயிர்

ஆ

ஆ = மாடு

ஆகாசத்தையுறுக்கி நீராக்கி = அஸ்திபேதி

ஆகாசத் தீபன் = பூநாகம்

ஆடன் = சூடன்

ஆடுங்கூத்தன் = துருசு

ஆணூாட்டு முலைக்கால் = முடவாட்டுக்கால்

ஆணு = மான் கொம்பு

ஆண்மையுள்ளோன் = பொட்டிலுப்பு

ஆதாளி மன்னன் = கரடி

ஆதார மூலசாரம் = அமுரியுப்பு

ஆதிக்கச் சிவப்பு = சிவப்பு

ஆதிநாராயணன் = வைரம்

ஆதி ரவிக்கல் = கல் காவி

ஆதி குருநாதன் = துருசு

ஆதி முதல் = பூவழலை

ஆதியாங்குடியோன் = சவுக்காரம்

ஆத்துக்குள் நேர்மணல் = கருமணல்

ஆத்தீகம் = கல்நார்

ஆத்தினுடவிந்து = கல்பூரசிலாஜித்

ஆப்த கேசரி = சூடம்

ஆயியுட மேனி = பச்சை

ஆயிரமாங்கதலி = செவ்வட்டை

ஆலத்திக் கல்ப்பூரம் = சூடன்

இ

இடம்புரி = சங்கு

இடி பீஜம் = இந்திரகோபப் பூச்சி

இணங்கன் = பொட்டிலுப்பு

இந்திரம் = கருங்கல்

இந்திரி = ஏகம்பச்சாரம்

இந்திரனாம் பீஜம் = இந்திரகோபப் பூச்சி

இந்திரம் = நீலம்

இமயமலைக் குறிப்பு = சகஸ்ரபேதி

இருளறுக்கும் ஒளியன் = பச்சை

இருட்பருகும் = சிவப்பு

இரும்புச் செம்பாம் = நாகப்பச்சை

இரவையறிவோன் = கோழி

ஈ

ஈசன் = சவுக்காரம்

ஈயுகின்றகளிப்பாங்கல் = கோமேதகம்

உ

உக்கிரம் = கல்நார்

உச்சை = பச்சைக்கர்ப்பூரம்

உடல்ரெண்டு உயிர் ஒன்று = கிளிஞ்சில்

உதருகின்ற வராகி வேல் = பன்னிமுள்

உதநிறம் = மாங்கிஷச்சிலை

உதையாமணிச்சிகர் பொருப்பு = சிலா நாகம்

உப்புச்சத்துரு = சீனாக்காரம்

உமுரி = நத்தை

உமுரியுப்பு = அமுரியுப்பு

உமையாள் = சவுக்காரம்

உயன்ற வேல் சங்கு = முள் சங்கு

உயிர் = கிளிஞ்சில்

உயிர் கிட்டம் = கல் கிட்டம்

உயிரின் குறடு = எலும்பு

உயிரின் சந்து = எலும்பு

உரகன் = பூவழலை

உருளை = முட்டை

உருஞ்சும் வேந்தன் = கரடி

உருப்பட்ட சிலை = கருங்கல்

உருப்பட்ட பலகை = வளையலுப்பு

உருக்கினம் = வெங்காரம்

உரோமத்தின் சங்கு = முள் சங்கு

உவர்க்காரம் = சவுக்காரம்

உவட்டில் கூர்மை = மாங்கிஷ பேதி

உள்ளுயிரானோன் = நத்தை

ஊ

ஊசக்கல் = சுக்கான்

ஊசரம் = பூவழலை

ஊஞ்சக்கல் = தேய்க்கல்

ஊணி = சிவப்பு

ஊமச்சி = நத்தை

ஊமை = முட்டை

ஊழிக்கனல் நிறம் = சிவப்பு

ஊனொத்த முள் = எலி முள்

ஊன் மலம் = மீனம்பர்

ஊஷர ராவணம் = பொட்டிலுப்பு

ஊஷரலவணம் = பொட்டிலுப்பு

ஊஷரத்தின் சாரம் = சவுட்டுப்பு

எ

எதிர்த்தேறும் வாளை = மீனெலும்பு

எயிறு = பற்கள்

எருது = மாடு

எருழி = பன்னிக்கொம்பு

எலும்புருக்கி = அஸ்திபேதி

எலும்பை நீராக்கி = அஸ்திபேதி

எவச்சி = எவச்சாரம்

எவசோகி = எவச்சாரம்

ஏ

ஏதகி = சத்திச்சாரம்

ஏத்தமுள்ள கன்னி = ஏகம்பச்சாரம்

ஏமசீவன் = சவுக்காரம்

ஏமனுடைய குணத்தி = சத்திச்சாரம்

ஏமத்தில் பிறந்தவள் = ஏகம்பச்சாரம்

ஏமவித்து = நாக மணல்

ஏயிறு = தந்தம்

ஏனம் = பன்றிக்கொம்பு

ஏனத்தின் முள் = பன்றி முள்

ஒ

ஒட்டச்சி = பூவழலை

ஒளி = படிகக்கல்

ஒளிறு மருப்பு = தந்தம்

ஒளி மணல் = கருமணல்

ஒற்றைவாவை = முள் சங்கு

ஒற்றைக் கொம்பன் = காண்டாமிருகம்

க

கங்காளன் = துருசு

கசடனுக்கு மண் = சுத்தமண்

கசக்கின்றவுப்பு = திலலவணம்

கசிகாபு = சிலாவங்கம்

கச்சத்தின் அங்கம் = மீனெலும்பு

கச்ச தூஷன் = தவளை

கச்சபன் = ஆமை

கச்சபத்தின் வாசம் = பொன்னம்பர்

கஞ்சயிறு சங்கம் = வளையலுப்பு

கடக்கலுழி = கருவண்டு

கடலுக்குள் பக்ஷி = கிளிஞ்சில்

கடவிழி = மான் கொம்பு

கடலின் பாசி = கடல்பாசி

கடல் குருவி = கல்லுப்பு

கடலுக்குள் அக்னிஜாலம் = கடல் நுரை

கடும் பச்சை = நாகப்பச்சை

கடும்பச்சை = மரகதம்

கடு அஸ்தி = கஸ்தூரி எலும்பு

கடுங்கார நீரானோன் = முட்டை

கடுவங்கச் சிலை = சிலாவங்கம்

கடுவேலைக் கந்தரமாம் = கடல் பாசி

கடுஞ்சாரி = நவச்சாரம்

கடுஞ்சுண்ணத்தி = சீனாக்காரம்

கடுப்பு = வளையலுப்பு

கடுங்கூர்மை = திலலவணம்

கடுங்கூர்மை = சிந்துலவணம்

கடுங்கூத்தன் = துருசு

கடுவுப்பு = மாங்கிஷேபேதி

கடைக்கவாதானம் = பல்

கணல் வேதி = சகஸ்ரவேதி

கண்டர் = துருசு

கண்ணுக்கு ராசன் = துருசு

கண்டகி = வளையலுப்பு

கண்ணீராக்கி = பச்சைக் கற்பூரம்

கண்டக நாக்கன் = காண்டாமிருகம்

கண்டகச் சங்கம் = முள் சங்கு

கதண்டு = வண்டு

கதளிப்பூ = பச்சைக் கற்பூரம்

கதிர்விரம்பணி = கோமேதகம்

கதித்தச் சங்கம் = முள் சங்கு

கதிக்கும் பச்சை = மரகதம்

கதுப்பு = மயிர்

கத்தை முத்தகதிர் விரிக்கும் பணி = நீலம்

கந்தி = பச்சை

கந்தி = மயிர்

கந்தம் = மயிர்

கமஞ்சூலவாளை = மீனெலும்பு

கம்பிச்சவீணை = கருவண்டு

கம்மிலேச்சமண் = செம்புமணல்

கயப்பினை = வங்கமணல்

கரடிமித்திரி = புற்றாஞ்சோறு

கரியின் கொம்பு = தந்தம்

கரிமுகவன் ஆணை = கதண்டு

கரிய குறும்பாடு = ஆடு

கருமயிடம் = மாடு (எருமை)

கருமேதை = மாடு (எருமை)

கருஞ்சிலைக்கல் = கொண்டகச்சிலை

கருஞ்சாளி = காண்டாமிருகம்

கருப்பி = யவச்சாரம், கருவண்டு

கருப்பு = புற்றாஞ்சோறு

கருப்பு = வெள்ளை நிமிளை, மீனம்பர்

கருமுகிலின் நண்டுக்கல் = காகச்சிலை

கருப்புப்பு = தில்லவணம்

கருவாமுப்பு = பொட்டிலுப்பு

கருமேகன் = துருசு

கருமேகக்கர்ப்பகாலம் = முடவாட்டுக்கால்

கருந்திரை = கருமணல்

கரைக்கல்லோலம் = கடல்பாசி

கரையறுக்குமணல் = கருமணல்

கர்ப்பார லவணம் = சிந்து லவணம்

கலுஷினாங்கல் = கருடக்கல்

கலையில் கொடுங்காரி = மாங்கிஷபேதி

கல் தீட்டு = கல்நார்

கல்நார் சிலை = சூடலைக்கல்

கல்நாதம் = அன்னபேதி

கல் சவடு நாதம் = அன்னபேதி

கல் வேகம் = அன்னபேதி

கல்தனை நீராக்கி = மாங்கிஷப்பேதி

கல் குரு = கர்ப்பூரசிலாஜித்

கல்லுக்குள் சவளை = கல்நார்

கல்லின் காரம் = கல்நார்

கல்லுயிர் = சகஸ்ரபேதி

கல்மலையின் நாதம் = கல்மதம்

கல்லுக்குள் சோரம் = கல்மதம்

கலக்காமி = கல்மதம்

கல்லி நீயம் = நீலாஞ்சனம்

கல்லொட்டி = நத்தை

கவச்சி = யவச்சாரம்

கவரெழுசங்கம் = முள்சங்கு

கவுனியம் = கொண்டகச்சிலை

களர்மண் = உவர்மண்

களிம்புமண் = செம்மண்

களிம்பு = அன்னபேதி

களித்தேரல்வண்டு = கருவண்டு

கறுமா = பன்னிக்கொம்பு

கற்றைவெயில் சீய்க்கும் = சிகப்பு

கனல்சிலை = மந்தாரச்சிலை

கன்னியுடமாதநீர் = பொன்னிமிளை

கா

காசாம்புவர்ணத்தோன் = துருசு

காசிக்கல் = காகச்சிலை

காசிலவணம் = காய்ச்சுப்பு

காசு சங்கம் = வளையலுப்பு

கானகக் கூபம் = நாகப்பச்சை

காச்மீரம் = கருங்கல்

காண்டகம் = காண்டாமிருசம்

காட்டிற்குள் சங்கு = நாகரவண்டு

காதிலிடும் ஆபரணத் தேன்கல் = கோமேதகம்

காந்தி = வைடூரியம்

காந்தியோன் = கற்பூரசிலாஜித்

காந்தியதிகமேனி = கல் காவி

காந்தல் மலர் = சவுக்காரம்

காந்தாரி = சத்திசாரம்

காந்தாரி = மாங்கிஷபேதி

காந்தமண் = செம்மண்

காமண் = சுத்த மண்

காமி = உவர்மண்

காயத்தையுருக்கி = அஸ்திபேதி

காய சுத்தி சுன்னம் = கற்பூரசிலாஜித்

காயகல்பம் = பூவழலை

காய சுத்தி உப்பு = அமுரியுப்பு

காய சுத்திக்குப் பாத்திரவான் = காந்தம்

காய்ச்சு மண்ணில் கஞ்சகம் = வளையலுப்பு

காய்ச்சு நீருப்பு = தில லவணம்

காரணமாம் உரு = ஆட்டுக் கொம்பு

காரணச்சத்தி = யவசாரம்

காருப்பு = தில லவணம்

காரும் சீவல் = கடல் பாசி

கார் முகம் = சவுட்டுப்பு

கார்மேகச்சாரம் = காச லவணம்

கார் சீலை = மாங்கிஷபேதி

கார்கோடகன் = கருடக்கல்

கார்க்கவரிக்கொம்பு = மாட்டுக் கொம்பு

காவி மண் = செம்மண்

காவேரி பறந்த மணல் = கருமணல்

காளவாய்க்கால் = செங்கல்

கானகத்தட்டான் = செவ்வட்டை

கானகக்கீதம் = கருவண்டு

கானகத்தின் சிந்து = பன்னிமுள்

கானகத்தின் சேவகன் = எலிமுள்

கானகத்தின் சேலகன் = பன்னிக் கொம்பு

கானகத்தின் குவடு = மரகதப்பச்சை

கானகத்தும்பி = வண்டு

கானமலப்பட்சி = மீனம்பர்

காஷ்டம் = கடல் நுரை

கி

கிட்டாச்சிலைக்கல் = கல் கிட்டம்

கிம்புரி கோடு = தந்தம்

கிரிபர்வதாரோணம் = பேரோசனை

கிரிட்டி = பன்னிக் கொம்பு

கிருஷ்ணம் = நாகமணல்

கீ

கீடம் = பன்னிக் கொம்பு

கு

குக்குடம் = கோழி

குகை நாதத்தி = ஸ்வர்ணபேதி

குங்குமவர்ணி = மஞ்சைக்கல்

குசத்தி = பூவழலை

குசத்தி = ஒடு

குஞ்சி = மயிர்

குஞ்சரத்தின் கோடு = தந்தம்

குடிலம் = வங்கமணல்

குடோரி = வெங்காரம்

குண்டலி = செவ்வட்டை

குடோரிமண் = சுத்தமண்

குப்பிச்சாரம் = காசிச்சாரம்

குப்பிலவணம் = வளையலுப்பு

குப்பிமாக்கல் = மாக்கல்

குமரி = ஸ்வர்ணபேதி

குமடைமண் = சுத்த மண்

குமிழ்க்கல் = கல்கிட்டம்

கும்பிக்கு மண் = சுத்த மண்

குருமுறை = சவுக்காரம்

குருச்சி = பூவழலை

குருச்சி = சீனாக்காரம்

குருவிற்கு ஆதி = பச்சைக் கற்பூரம்

குரோட்டன் = பன்னிக் கொம்பு

குலவரை = மந்தாரச்சிலை

குலப்பம் = செம்பு மணல்

குலசிகாமணி = கர்ப்பூரசிலாஜித்

குலைக்கால் = முடவாட்டுக்கால்

குலையோன் = துருசு

குவடுதனிலுதித்தோன் = ஸ்வர்ணபேதி

குவட்டுக்கால் = முடவாட்டுக்கால்

குவட்டுக்குள் முலைச்சி = ஸ்வர்ணபேதி

குவட்டி நீயம் = நீலாஞ்சனம்

குழை = மயிர்

குளத்துக்குருவியானோன் = நண்டு

குளத்துக்குள் ருத்ராக்ஷம் = நத்தை

குளத்துக்குள் சிப்பி = கிளிஞ்சி

குறுஞ்சிலைக்கல் = ஈரல்கல்

குன்றைவில்லி = துருசு

குன்றினிற் கேழல் = பன்னிமுள்

கூ

கூத்தன் = துருசு

கூந்தல் = மயிர்

கூப்பிடுஞ்சங்கு = முள் சங்கு

கூர்மையுள்ளோன் = ஆமை

கூர்மராஜன் = ஆமை

கூர்மையாளன் = சவுக்காரம்

கூர்மை நாறி = கந்திலவணம்

கூளான் = கொண்டகச் சிலை

கெ

கெங்காகுணன் = நவசாரம்

கெற்பத்தில் மால்வீடு = சாளிக்ராமம்

கே

கேசரம் = பன்னிமுள்

கேசரம் = மயிர்

கேதகை = மயிர்

கேதுவிற்கு சிலாங்கண் = புஷ்பராகம்

கேதுவசூரன் = புஷ்பராகம்

கேழல் = பன்னிமுள்

கேழல் = பன்னிக்கொம்பு

கை

கையானை = காண்டாமிருகம்

கொ

கொக்கு மா நிறம் = மாந்துளிர்க்கள்

கொடுங்கோபிச்சிலை = மஞ்சட்கல்

கொடுப்பினை = வங்கமணல்

கொத்துகின்ற குறடுள்ளோன் = நண்டு

கொந்தளம் = காண்டாமிருகம்

கொந்தளகம் = மயிர்

கொந்தாரரத்தக்கல் = ஈரல் கல்

கொழுப்புக்கல் = ஈரல் கல்

கொம்பூதி = நத்தை

கோ

கோ = மாடு

கோடி வங்கம் = வங்க மணல்

கோமிய வர்ணம் = கோமேதகம்

கோழிக்கல் = ஈரல் கல்

கோழிச்சிலைநாகம் = சூடலைக்கல்

ங

ஙகாரபேதி = அன்னபேதி

ச

சக்கரம் = ஒடு

சக்களத்தி = ஒடு

சக்கிலிச்சி = சத்திசாரம்

சங்கஞ்செடியில் குடிப்புக்கி = நாகரவண்டு

சங்கின் காட்டுக்குள்ள முரி = நாகரவண்டு

சங்காரகாலத்துவுப்பு = அமுரியுப்பு

சங்கினி = உவர்மண்

சஞ்சீவி = பூநாகம்

சஞ்சீவி = இந்திரகோபப் பூச்சு

சடச்சி = வெள்ளி நிமிளை

சடவுப்பு = அமுரியுப்பு

சடைநிறம் = மாங்கிஷச்சிலை

சண்முகக்கொடியோன் = தவளை, கோழி

சண்டைக்குச்சூரன் = கோழி

சதாசிவம் = சவுக்காரம்

சதைநிறம் = மாங்கிஷச்சிலை

சத்தி = வெள்ளி நிமிளை

சத்தியுடன் கூரான கல் = படிகக்கல்

சத்திநாதம் = பொன்னிமிளை

சத்தியுடகூராய்நின்றோன் = நவசாரம்

சத்து = கல்நார்

சத்துக்கானோன் = செவ்வட்டை

சந்திரபீஜம் = இந்திரகோபப் பூச்சி

சந்திரன் சீப்பு = முத்துச்சிப்பி

சந்தாணி = வெங்காரம்

சந்திரன் = பச்சைக்கற்பூரம்

சந்திரவுப்பு = இந்துப்பு

சந்தானக்கூர்மை = பிடலவணம்

சரக்கூடம் = பற்கள்

சரமுல்லை = பற்கள்

சரக்குமித்ரு = வெங்காரம்

சரக்குச் சத்துரு = சவுட்டுப்பு

சமுத்திரத்தில் கோஷம் = கடல் நுரை

சம்போகம் அடிக்கடி வேண்டியவன் = கோழி

சலக்கனல் = கடல் நுரை

சலக்குரு = நவச்சாரம்

சலக்கூர்மை = அமுரியுப்பு

சலக்கூர்மை = நவசாரம்

சலச்சீவன் = புஷ்பராகம்

சலஞ்சலம் = சங்கு

சலம்புரி = சங்கு

சலவச்சி = சத்திச்சாரம்

சலப்பிரிதிவி = கர்பூரசிலாஜித்

சலமலம் = கடல்பாசி

சலமூன்றுக்கு மித்ரு = முடவாட்டுக்கல்

சலவை மண் = சுத்தமண்

சலத்தோடு = சகஸ்ரபேதி

சலாமேனி = கொண்டக்கச்சிலை

சல்லியம் = எலும்பு

சவர்ச்சலம் = கல்லுப்பு

சவலச்சி = சத்திச்சாரம்

சவளை = வங்கமணல்

சவுடு = பூவழலை

சனி = வெள்ளி நிமிளை

சனிபகவான் கல் = காகச்சிலை

சனிவிந்து = நீலம்

சா

சாகம் = ஆட்டுக்கொம்பு

சாதகச் சூத்திரம் = வைடூர்யம்

சாதகச் சீவன் = வைடூர்யம்

சாதக நீர்ச்சாலை = கொண்டச்சிலை

சாதகன் = கஸ்தூரி எலும்பு

சாதகலேடி = மான் கொம்பு

சாத்தம் = மான் கொம்பு

சாந்தமாம் பார்வை = பற்கள்

சாரங்கன் = மான்கொம்பு

சாரவுப்பு = சவுட்டுப்பு

சாரி சாதகன் = கஸ்தூரி எலும்பு

சாரோகி = சத்திச்சாரம்

சாளகம் = ஆட்டுக்கொம்பு

சி

சிகை = மயிர்

சிங்கம் = மான்

சித்தநாபக்கல் = தவளைக்கல்

சித்தர் மகிழ்ச்சி = கதண்டு

சித்தச்சிப்பி = கிளிஞ்சில்

சித்தரஸவாதசுத்தக்கல் = ராஜவர்த்திக்கல்

சித்திரமெழுதுமண் = செம்மண்

சிந்து சாதகச் சூத்ரம் = வைடூர்யம்

சிந்து சாரம் = சிந்துலவணம்

சிந்துப்லவம் = கடல் நுரை

சிந்தூர ரத்தம் = இந்துப்பு

சிப்பி = கிளிஞ்சல்

சிம்போத்து = ஆட்டுக்கொம்பு

சிரிங்கிகோகிரி = பேரோசனை

சிருஷ்டியாளன் = சவுக்காரம்

சிலநார் = கல்நார்

சிலாலம் = இந்துப்பு

சிலாகை = தேக்கல்

சிலாவிந்தம் = கல்நார்

சிலாஞ்சனம் = நீலாஞ்சனம்

சிலையில் வளர்ந்தோன் = வைரம்

சிலை நிறம் = மாங்கிஷச்சிலை

சிலையாங்கல் = செங்கல்

சிலைகந்தி = சகஸ்ரபேதி

சிலையொழுக்கு = கல்மதம்

சிலைக்குள் தீட்டு = கல்மதம்

சிலைக்குள் சுரோணிதம் = கல்மதம்

சில்லு = ஒடு

சிவகேசம் = காச்மீரப்படிகம்

சிவந்தலோகமண் = செம்புமணல்

சிவப்புக்கல் = கல்நார்

சிவப்புக்கல் = ஈரல்கல்

சிவப்பி = ஏகம்பச்சாரம்

சிவலோகச் சேவகன் = காந்தம்

சிறந்த காவிக்கல் = வெள்ளைச்சுக்கான்

சிறந்தகல் = செங்கல்

சிறப்பாம் உப்பு = சிந்துலவணம்

சிறுநீர்ப்பாசி = கடல்பாசி

சிற்பரி = வெள்ளி நிமிளை

சிற்பரை = சவுக்காரம்

சிறுநார் = கல்நார்

சின்னம் = சங்கு

சீ

சீரலத்தான் = செப்புமணல்

சீவனிப்புடம் = மந்தாரச்சிலை

சீனி = சீனாக்காரம்

சு

சுகந்தன் = கஸ்தூரி எலும்பு

சுக்கான்பர்வதம் = சிலாவங்கம்

சுக்கிரன் = வெள்ளி நிமிளை

சுடர்விளக்கும் பணி = புஷ்பராகம்

சுடலையாடி = சவுக்காரம்

சுடலையோன் = துருசு

சுடர்க்கொடி = சூடம்

சுத்திரனாரத்னம் = புஷ்பராகம்

சுத்தியானோன் = சவுக்காரம்

சுத்திமிருது = நாகமணல்

சுயம்பாகி = சவுக்காரம்

சுயமாக விளையுங்கல் = வெள்ளைச்சுக்கான்

சுரபி = மாடு

சுருட்டு மணல் = கருமணல்

சுரூஷைரக்கல் = சுக்கான்

சுலவணம் = சவுட்டுப்பு

சுவர்ச்சாதி = சத்திச்சாரம்

சுவர்ணத்தான் = நாகமணல்

சுன்னக்கல் = சுக்கான்

சுன்னம் = கல்நார்

சுன்னத்தி = சத்திச்சாரம்

சுன்னத்தோன் = கர்ப்பூரசிலாஜித்

சுன்னத்தில் கூர்மையானோன் = நாகரவண்டு

சுன்னத்தில் வலகாரி = கிளிஞ்சில்

சுன்னத்திற்குயிரானோன் = முட்டை

சூ

சூடிச்சி = எவச்சாரம்

சூதகண்டகி = சத்திச்சாரம்

சூதசத்ரு = துருசு

சூதத்தைக்கத்தும் சூரன் = பொன்னம்பர்

சூதவஞ்சனம் = நீலாஞ்சனம்

சூதாங்குசன் = காந்தம்

சூரச்சங்கம் = முள்சங்கு

சூரன் = பன்னிக்கொம்பு

சூரியன் = வைரம்

சூலானோன் = சவுக்காரம்

சூலினி = ஏகம்பச்சாரம்

சூளைக்கல் = செங்கல்

செ

செகப்பிடி = யானைக் கொம்பு

செங்கோலம் = செம்பு மணல்

செங்கன் = கரடி

செஞ்சடையோன் = காச்மீரபடிகம்

செஞ்சிலை = கல்காவி

செஞ்சிலை = சகஸ்ரபேதி

செஞ்சிலைக்கல் = செங்கல்

செந்நீர் = கல்மதம்

செந்தூரமண் சிலை = கல்காவி

செந்தண்டுக்கொடி = பவழம்

செந்தூரச் சிலை = மாக்கல்

செந்நிறம் = மாந்துளிர்க்கல்

செந்நிறம் = மாங்கிஷிச்சிலை

செம்பாறை = தேக்கல்

செம்பிலி = ஆட்டுக் கொம்பு

செம்புவுரைக்கல் = கல்கிட்டம்

செம்பு மண் = செம்மண்

செம்மீனின் வைரம் = மீனம்பர்

செம்பி = கருவண்டு

செம்மண் காவி = கல்காவி

செம்பொடி = செம்புமணல்

செம்பொடி = தேக்கல்

செம்படிகம் = படிகக்கல்

செம்பலகையுருக்குக்கல் = செங்கல்

செயமான புடமண் = சுத்த மண்

செயநீர்க்கர்த்தன் = நவசாரம்

செயலொத்த மண்ணின் ஒடு = ஒடு

செரிக்கல் = தவளைக்கல்

செலகூபம் = நத்தை

செலிநிறம் = மாந்துளிர்க்கல்

செவ்வாயொளி = சிவப்பு

செவ்வாய்மண் தாம்பூரம் = செம்புமணல்

செழித்த கல் = வெள்ளைச்சுக்கான்

சே

சேலொளி = வைடூர்யம்

சேலொத்த வெண்கல் = படிகக்கல்

சேவல் = கோழி

சேவு = மாடு

சை

சைந்தவம் = இந்துப்பு

சொ

சொக்கம் = சிவப்பு

சொறிக்கல் = சுக்கான் கல்

சொறிப்புள்ளிக் கல் = மஞ்சட் கல்

சொறியோன் = தவளை

சோ

சோதிமயமான வேதி = பூநாகம்

சோமன் = சவுக்காரம்

சோரம் = நாகமணல்

சோவாரி = எவச்சாரம்

சௌ

சௌவீராஞ்சனம் = நீலாஞ்சனம்

ஞா

ஞானி = கோழி

ட

டங்கணம் = வெங்காரம்

த

தகர் = ஆடு

தங்கத்தைச் சலமாக்கி = சுவர்ணபேதி

தஞ்சுகன் = சிலாவங்கம்

தணலின் பூமி = உவர் மண்

தணிப்பண்ணை = சூடம்

தண்ணீர் தவளையானோன் = தவளை

தத்தூரன் = தவளை

தந்திரத்தின் மேகம் = நீலம்

தந்தம் = பற்கள்

தயங்காத உலூர் சிலக்கல் = காகச்சிலை

தரணி நாதன் = பூவழலை

தரணி நாதன் = காந்தம்

தரணியைக் கிளையுங் கொம்பு = பன்னிக் கொம்பு

தரிக்கும் காவி = கல்காவி

தருணர் விந்து = வைரம்

தருவென்ற சாரம் = காச லவணம்

தலையில்லாச் சேவகன் = நண்டு

தலையுச்சி = பச்சை

தவள முத்து = பற்கள்

தவளம் = சங்கு

தழல் கல்லு = காந்தம்

தளுக்குறுவான் = வைரம்

தற்கால லவணம் = கல்லுப்பு

தற்பரம் = சவுட்டுப்பு

தற்பரவுப்பு = சிந்து லவணம்

தனித்து நின்ற சோதி = முத்துச்சிப்பி

தனுபீஜம் = இந்திரகோபப்பூச்சி

தா

தாகசிக்கல் = காகச்சிலை

தாசக்கல் = சிலாநாகம்

தாசிமலைக்கல் = சாளிக்ராமம்

தாசீபுத்ரன் = சுவர்ணத்தான்

தாது சத்ரு = ஏகம்பச்சாரம்

தாதுகளை = புஷ்பராகம்

தாமிரத்தின் மண் = செம்மண்

தார் = சுவர்ணத்தான்

தாளவாய் = பற்கள்

தி

திகிரிக்குள்ளடுக்கும் பச்சை = மரகதம்

திகிரிக்குள் கலைந்தசிலை = மாந்துளிர்க்கல்

திசைநாதன் = சங்கு

திடமுறியும் கவசம் = மாடு

திண்கல் = காச்மீர படிகம்

திண்டுக்கல் = வெள்ளைச் சுக்கான்

திண்பல்லம் = கரடி

திரணிக்கல் = காகச்சிலை

திரண்டுருண்ட கொடிச்சி = புற்றாஞ்சோறு

திரம்புவலி = வங்க மணல்

திரணச்சி = எவச்சாரம்

திருகிக்கால் = முடவாட்டுக்கால்

திராவகத்துக் கடுங்காரபேதி = அன்னபேதி

திரைசுருட்டும்பாசி = கடல்பாசி

திலக்ஷாரம் = தில்லவணம்

திலதன் = கஸ்தூரி எலும்பு

தீ

தீக்கஞ்சி = சூடம்

தீக்கூர்மை = தில்லவணம்

தீச்சாலம் = அமுரியுப்பு

தீபக்காந்தி = வைரம்

தீபக்கொடிச்சி = சூடம்

தீபநிறம் = மாந்துளிர்க்கல்

தீர்க்கன் = பூவழலை

தீர்மைக்கல் = ராஜவர்த்திக்கல்

து

துகிர் = பவழம்

துப்பு = பவழம்

தும்பி = கருவண்டு

துரச்சி = காசிச்சாரம்

துரச்சி = வெள்ளி நிமிளை

துருசுமேல் = நவச்சாரம்

துவரச்சிலை = கல்காவி

துள்ளிவிந்து = முத்துச்சிப்பி

தூ

தூய்மையாளன் = வெள்ளி நிமிளை

தெ

தெல்லுப்பு = வளையலுப்பு

தே

தேசாசாபம் = மயிர்

தேசாந்திரி = ஒடு

தேவிக்கு முத்திரை = காச்மீரபடிகம்

தேனகத்தில் குடிச்சி = கதண்டு

தேனிறம் = மாந்துளிர்க்கல்

ந

நகர் கிட்டம் = கல் கிட்டம்

நஞ்சுக்கல் = சிலாவங்கம்

நடுப்பச்சை = மரகதம்

நதிதனிலே கதிக்கும் பச்சை = நாகப்பச்சை

நமுரியுப்பு = அமுரியுப்பு

நயனத்தோன் = புஷ்பராகம்

நரியுண்ணி = நண்டு

நலமான உதிரத்தோன் = கஸ்தூரி எலும்பு

நல்லுப்பு = கல்லுப்பு

நல்பச்சை = துருசு

நவ அமுரி = நவச்சாரம்

நவசித்தக்ஷாரம் = நவச்சாரம்

நவச்சி = எவச்சாரம்

நவச்சாரமித்ரு = பொட்டிலுப்பு

நவலோகத்துரட்டி = காந்தம்

நளிர்மண் = செம்மண்

நா

நாகதந்தன் = காந்தம்

நாகத்தைஸ்வர்ணமாக்கி = அஸ்திபேதி

நாக பேதி = இந்திரகோபம்

நாகச்கிலைக்கல் = சிலாநாகம்

நாங்கவங்கம் = வங்கமணல்

நாட்டு மண் = செம்மண்

நாதாந்தி = நாகப்பச்சை

நாதாந்தி = கல்காவி

நாதாந்தி = வெள்ளி நிமிளை

நாதம் = அப்ரகம்

நாதம் = உவர்மண்

நாதாந்தம் = படிகம்

நாயகி தன் மேனிக்கல் = மரகதப்பச்சை

நி

நிசியில் தத்துங்கல் = தவளைக்கல்

நிலையலுப்பு = வளையலுப்பு

நிர்முக்தன் (நிறமுத்தன்) = துருசு

நிறமான கண்ணை யுள்ளோன் = பன்னிக் கொம்பு

நிறுமைக்கல் = ராஜவர்த்திக்கல்

நின்ற சோதி = முத்துச்சிப்பி

நிஷ்களன் = துருசு

நீ

நீங்காதவோசையோன் = சங்கு

நீச்சோடம் = முத்துச்சிப்பி

நீடாலைக் கோடு = சூடலைக்கல்

நீந்துண்டை = முட்டை

நீர்க்கல் = தேக்கல்

நீர்க்குன்று = நத்தை

நீர்க்காயம் = நத்தை

நீர்ப்பனி சனித்தது = ஆமை

நீர்வாளையங்கம் = மீனெலும்பு

நீரோட்டம் பாயும்கல் = வெள்ளைச் சுக்கான்

நீலம் = கருங்கல்

நீலக்கல் = ராஜவர்த்திக்கல்

நீலச்சிலை சூதம் = நீலாஞ்சனம்

நீலமணல் = கருமணல்

நீலமேகத்திலுற் பவிக்கும் கல் = கருங்கல்

நெ

நெரிக்கல் = சுக்கான்கல்

நெருப்புப்பு = வளையலுப்பு

நே

நேர்மணல் = கருமணல்

ப

பகட்டுக்கல் = தவளைக்கல்

பசளை = பச்சை

பசு = மாடு

பசுங்களை = பச்சை

பசுமையாஞ்சிலை = மஞ்சட்கல்

பசுமலைச்சரக் குழலூத்து = பேரோசனை

பசுவுங்கொம்பு = மாட்டுக் கொம்பு

பஞ்சநிறக்கல் = சிலாநாகம்

பஞ்சாங்கம் = ஆமை

படத்திற்காரூடன் = கருடக்கடல்

படிகம் = படிகக்கல்

படுகி = சீனாக்காரம்

படைராசன் = பொட்டிலுப்பு

பட்சியெச்சம் = பொன்னம்பர்

பட்சி = சங்கு

பட்சிராசன் = கருடக்கல்

பணிலம் = சங்கு

பத்தவாக்னி = கடல் நுரை

பத்துக் காலுடைய மன்னன் = நண்டு

பரச்சி = சத்திச்சாரம்

பரசுபாணி = துருசு

பரங்கூர்மை = காசிச்சாரம்

பரமயோகி = நண்டு

பராபரன் = காந்தம்

பருதிக்கல் = மந்தாரச்சிலை

பருஞ்செம்பின் பச்சை = நாகப்பச்சை

பருந்தினுக்கு விருந்தானோன் = நண்டு

பறையின் நாதம் = அப்பிரகம்

பலகையெழுதுங்கல் = மாக்கல்

பலவர்ணம் பாகக்கல் = மந்தாரச்சிலை

பலாக்ரமன் = காண்டாமிருகம்

பலிபுத்திக்கல் = காகச்சிலை

பல்லுக்கேத்தான் = துருசு

பல்லியம் = எலும்பு

பவளம் = சவுக்காரம்

பழம்பச்சை = பச்சை

பழுத்த மண் = செம்மண்

பறங்கி = சிவப்பு

பறங்கிச்சிலை நிறம் = மாங்கிஷிச்சிலை

பறவைச்சக்ரம் = பொன்னம்பர்

பறிக்கிட்டம் = கல்கிட்டம்

பனிக்கூர்மை = இந்துப்பு

பனியினுப்பு = கெந்திலவணம்

பா

பாகுமண் = செம்மண்

பாங்கச்சாரம் = காய்ச்சுப்பு

பாணக்கல் = வைடூர்யம்

பாணிச்சி = சீனாக்காரம்

பாணி = சங்கு

பாண்டத்தி = ஓடு

பாண்டத்தில் சமைத்தவுப்பு = இந்துப்பு

பாதத்தோன் = சவுக்காரம்

பாதளவேதியானோன் = கரடி

பாலைச்சிலைக்கல் = படிகக்கல்

பால்போலச்சிரசோன் = கருடக்கல்

பால் வெள்ளை மண் = சுத்தமண்

பாம்பின் வாய்க் கறையானோன் = நாகரவண்டு

பாம்பிற்குத் தண்ணீர் கொடுப்போமன்னன் = நாகரவண்டு

பாம்புண்டச் சித்தன் = கரடி

பாறை = கல்கிட்டம்

பாறையில் பனியால் விளைந்தவுப்பு = சிந்துலவணம்

பாறையுப்பு = கல்லுப்பு

பாஷாணம் பவளமாக்கி = அஸ்திபேதி

பி

பிரட்டுக்கல் = பேரோசனை

பிரமம் = ஆட்டுக்கொம்பு

பிரவாளம் = பவழம்

பிரிசக்கிணறு = நாகப்பச்சை

பிரையாங்கல் = தேக்கல்

பிரோத்தம் = கல்லுப்பு

பு

புகழ்வாய்ந்த செல்வி = கஸ்தூரியெலும்பு

புகையுஞ்சூளை = ஒடு

புகைநீர்க்காதி = எவச்சாரம்

புசங்க சத்ரு = பொட்டிலுப்பு

புடலவணம் = பொட்டிலுப்பு

புதுக்கலசம் = ஒடு

புத்துக்குள் குகைச்சி = புத்தாம்பழம்

புத்தை = கரடி

புத்தொளிரிருக்கைப் பொருப்பு = தேக்கல்

புந்தியின் விந்து = பச்சை

புலச்சி = எவச்சாரம்

புலிக்கண் = கோமேதகம்

புவச்சி = எவச்சாரம்

புள்ளி நிறமிருகம் = மான் கொம்பு

புறைக்கல் = தேக்கல்

புறை போக்குங்கள் = தேக்கல்

பூ

பூசாரம் = பூவழலை

பூச்சாரக்கல் = சுக்கான்கல்

பூதகம் = கஸ்தூரி எலும்பு

பூதிச்சி = எவச்சாரம்

பூதிலோகம் = வங்கமணல்

பூ நாதன் = பொட்டிலுப்பு

பூ நீறு = பூவழலை

பூ மாதா = உவர்மண்

பூமிக்கு நாயகம் = காச்மீரப்படிகம்

பூமிக்குள் வெளுப்புமண் = சுத்தமண்

பூமிச்சருக்கம் = உவர் மண்

பூமிக்கூர்மை = பொட்டிலுப்பு

பூமி வேர் = பூனாகம்

பூமியுடகுரு = உவர்மண்

பூமி நாதன் = பூவழலை

பூமிருது = பூவழலை

பூயன் = காண்டாமிருகம்

பூவிந்து = அப்ரகம்

பூனீறுக்கல் = வெள்ளைச்சுக்கான்

பூனைக்குச் சத்துரு = எலிமுள்

பெ

பெலரோத்ஸாகி = ஆட்டுக்கொம்பு

பே

பேய்க்கல் = வெள்ளைச்சுக்கான்

பேருடையோன் = காண்டாமிருகம்

பொ

பொங்காரி = வெங்காரம்

பொடிச்சிலை = மஞ்சட்கல்

பொதிகை மலை விந்து = சகஸ்ரபேதி

பொரிகாரி = வெங்காரம்

பொரிக்கல் = சுக்காங்கல்

பொரிக்கல் = சிலாவங்கம்

பொறுமுக்கல் = வெள்ளைச்சுக்கான்

பொற்புதையல் குடியிருப்பி = கதண்டு

பொன்பிறந்த கன்னி = ஏகம்பச் சாரம்

பொன் பிறந்த கெர்பத்திலுற்பத்தி = பொன்னிமிளை

பொன்னிற முதிர்ந்தோன் = பொன்னிமிளை

பொன்னிறச்சத்தி = பொன்னிமிளை

போ

போத்திரி = பன்னிக்கொம்பு

போரம் = பன்னிக்கொம்பு

போராங்கல் = சுக்காங்கல்

ம

மகரமீனங்கம் = மீனெலும்பு

மகாசேனை கூடிவாழும் = புற்றாம்பழம்

மகாபேகன் = தவளை

மகாப்ரகாசி = அப்ரகம்

மகிஷம் = எருமை

மக்கிய தீக்கட்டி = கடல் நுரை

மசகம் = மயிர்

மச்சத்தின் செல்வி = மீனெலும்பு

மஞ்சள் வெள்ளைக்கரு = முட்டை

மஞ்சள் நிறத்தி = ஸ்வர்ணபேதி

மடும் பச்சை = மரகதப்பச்சை

மணக்கூர்மை = வளையலுப்பு

மணல் குன்றி = கருமணல்

மணிசிகரப் பொறுப்பு = சூடாலைக்கல்

மணிக்காரி = வெங்காரம்

மணியொலியில் சிக்கும் = மான்

மண்டூகம் = தவளை

மண்தின்னி = செவ்வட்டை

மண்கலம் = ஒடு

மண்ணின் வர்த்தம் = ராஜவர்த்திக்கல்

மண்ணிறம் = மாங்கிஷிச்சிலை

மண்ணில் கூர்மை = சவுட்டுப்பு

மண்டூகச் சீவன் = தவளைக்கல்

மதநிறம் = மாங்கிஷிச்சிலை

மதங்கத்தின் ராவு = தந்தம்

மத்னசாரி = பச்சைக்கற்பூரம்

மதிக்கூர்மை = இந்துப்பு

மதிக்ரந்தி = காச்மீரபடிகம்

மதிகாந்தி = படிகம்

மதியுப்பு = இந்துப்பு

மதிபூரம் = பச்சைக்கற்பூரம்

மதிப்பூரமித்ரு = இந்துப்பு

மதிமேகக்கல் = மந்தாரச்சிலை

மதுவேட்கையெழுப்பி = கருவண்டு

மந்தாரகாந்தி = பிடலவணம்

மந்தாரமேகவர்ணக்கல் = மந்தாரச்சிலை

மந்தாரக் கொங்கையோன் = துருசு

மந்திரமாம்கூடக்கல் = கருங்கல்

மந்தாரக்கல் = ஈரல்கல்

மரிக்கல் = சுக்கான்கல்

மருவி = கருமணல்

மருந்தீடுவிஷங்கள் போக்கி = காண்டாமிருகம்

மலசாக்ரம் = கடல் நுரை

மலைக்கரு = சகஸ்ரபேதி

மலைத்துடக்கு = கல்மதம்

மலைத் தூமை = கல்மதம்

மலையின் மதம் = கல்மதம்

மலையில் சக்ரம் = சாளிக்ராமம்

மலைரத்தம் = கல்மதம்

மலைநஞ்சு = கல்மதம்

மலைநாதம் = சகஸ்ர பேதி

மலைமேகச்சொன்னக்கல் = ராஜவர்த்திக்கல்

மலைராஜன் = கரடி

மலைவீரியம் = அன்னபேதி

மலைருது = அன்னபேதி

மலைருசிச்சி = மாங்கிஷிபேதி

மலைக்கால் = முடவாட்டுக்கால்

மலையில் தொங்கும் கால் = முடவாட்டுக்கால்

மலையில் உற்பவித்த மாமோசன் = பேரோசனை

மலையருவியிலே விடுபட்டது = நாகப்பச்சை

மாறிக்கிட்டம் = கல்கிட்டம்

மறை = கல்கிட்டம்

மனோகந்தக்கல் = சூடாலைக்கல்

மன்னன் = கடல்பாசி

மாகச்சிலைக்கல் = சிலாநாகம்

மாகுடிலைச்சி = கதண்டு

மாங்கிஷ வாசத்தோன் = கஸ்தூரியெலும்பு

மாங்கிஷத்தை நீராக்கி = மாங்கிஷபேதி

மாங்கிஷத்தின் சிலை = ஈரல்கல்

மாங்குளுத்தான் = பூநாகம்

மாசற்ற சோதி = சூடம்

மாசக்கல் = தவளைக்கல்

மாசற்றலிங்கம் = கொண்டச்சிலை

மாசாரி = கிளிஞ்சில்

மாசாத்தின் கந்தம் = மயிர்

மாசிக்கல் = காகச்சிலை

மாசிலாதான் = பூநாகம்

மாசித்தன் = பேரோசனை

மாசித்தியான கல் = கருங்கல்

மாச்சிலை மா = மாக்கல்

மாடம் = சூடம்

மாட்சிகம் = பொன்னிமிளை

மாணிக்கம் = சிவப்பு

மாதுளம்பூ நிறம் = மாந்துளிர்க்கல்

மாபக்தரூபி = சூடம்

மாயூழம் = வங்கமணல்

மாயையுடமேனி = நாகப்பச்சை

மாருதி கங்கை = கொண்டச்சிலை

மாருதக்கல் = மந்தாரச்சிலை

மாருதிநாதம் = வங்கமணல்

மாருதி = வெள்ளை நிமிளை

மார்ஜாலநேத்ரன் = கோமேதகம்

மாலுனுடமேனி = பச்சை

மாலுட கண்டகன் = புஷ்பராகம்

மாலைக் கடைக்கண் = காச்மீரபடிகம்

மாலைக்கல் = படிகம்

மால் மைத்துனன் = துருசு

மால் தங்கை = ஏகம்பச்சாரம்

வாவிந்து = அப்ரகம்

மால் பிரதிஷ்டையுள்ளோன் = ஆமை

மாறாத வர்ணக்கல் = காகச்சிலை

மானபேதி = பூநாகம்

மானிறம் = மாங்கிஷிசிலை

மி

மிருத்ய கந்தம் = கல்லுப்பு

மின்னல் தளுக்கு = நாகமணல்

மீ

மீனஞ்சு = கடல் நுரை

மீன் வயத்துவைரம் = மீனம்பர்

மு

முக்கண்ணிலொருகண் = பச்சைக்கற்பூரம்

முதுபரமன் = செம்புமண்

முத்தி = சவுக்காரம்

முத்யகோஷ மூர்க்கன் = தவளை

முமுரியுப்பு = அமுரியுப்பு

மும்மூர்த்தி = முட்டை

முலைப்பாலி = புற்றாஞ்சோறு

முழுமுதற்கொட்டு = மீனெலும்பு

முள் பிரமாணம் = பன்னி முள்

முள்ளெலி = எலி முள்

முறுவல் = பற்கள்

முனிமூத்ரம் = கல்லுப்பு

முனிவர் பூசித்தலிங்கம் = கொண்டகச்சிலை

மூ

மூதண்டமுகடு = மாக்கல்

மூர்க்கன் = சவுக்காரம்

மூர்க்கன் = பூவழலை

மூலவன்னி = அமுரியுப்பு

மூவர்கல் = சாளிக்ராமம்

மூழ்கிக்கிடக்கும் = முள் சங்கு

மூன்று வர்ணத்தி = பன்னி முள்

மெ

மெழுகுக்குக் கூர்மையானான் = முட்டை

மே

மேகக்கல் = மந்தாரச்சிலை

மேகச்சாய்கை = நீலம்

மேகச்சிலை = சிலாவங்கம்

மேகத்தின் தோயம் = காசலவணம்

மேகத்தின் விந்து = பூனாகம்

மேகப் பச்சை = மரகதம்

மேகவர்ணன் = முத்துச்சிப்பி

மேகவார்த்தையறிவோன் = தவளை

மேகநாதன் = நவச்சாரம்

மேதச்சிலை = மாக்கல்

மேதினி = உவர்மண்

மேல்மூடி = நத்தை

மேஷத்தின் கொம்பு = ஆட்டுக் கொம்பு

மேஷக்கால் = முடவாட்டுக்கால்

மேஷத்தில் செரித்த மலக்கணம் = பொன்னம்பர்

மோ

மோட்டெலி = எலி முள்

மோதிப் பொருப்பு = மாக்கல்

மோதிரன் = ஆமை

மௌ

மௌனி = ஆமை

ர

ரத்னம் = சிவப்பு

ரவி = சவுக்காரம்

ரவியின் நிறம் = மாந்துளிர்க்கல்

ரவிப்பிரியோன் = செம்புமணல்

ரா

ராகமண் = செம்மண்

ராகு = கோமேதகம்

ராஜாவின் அவத்தக்கல் = ராஜவர்த்திக்கல்

ராஜமண்டூகன் = தவளை

ரி

ரிஷபம் = மாடு

ரெ

ரெம்பாச்ரோணிதம் = இந்திரகோபப் பூச்சி

ரோ

ரோமம் = மயிர்

ல

லவணக்கடுங் கூர்மை = அமுரியுப்பு

லோ

லோகஜீவன் = காந்தம்

லோகபதி = ஏகம்பச்சாரம்

லோகத்திற்குச் சத்ரு = முட்டை

லோக பேதனன் = முட்டை

லோகத்தின் கசடறுக்கு மண் = சுத்தமண்

லோகாஞ்சனம் = நீலாஞ்சனம்

லோகக்நேயம் = கடல் நுரை

வ

வங்கக்கல் = சுக்கான்

வங்கக்கல் = வெள்ளைச்சுக்கான்

வங்கத்தின் கல் = சிலாவங்கம்

வசுந்தரி = உவர்மண்

வச்சிரத்துண்டு = எலும்பு

வச்சிரமாந்தலைச்சி = கதண்டு

வச்சிரத்தைத் தோயமாக்கி = அஸ்திபேதி

வச்சிரவேடம் = காச்மீரப்பபடிகம்

வடிசோமன் = பச்சைக்கற்பூரம்

வடிப்பினையின் வங்கம் = வங்கமணல்

வணங்காத லவணம் = பிடலவணம்

வண்ணான் = சவுக்காரம்

வண்ணாத்தி = பூவழலை

வம்புக்கல் = தேக்கல்

வம்புநிறம் = மாந்துளிர்க்கல்

வம்பூரை = தேக்கல்

வயல்கல் = வெள்ளைக்கல்

வயிறுவைக்கும் மணியாரம் = வைடூர்யம்

வராகதந்தம் = பன்னிக்கொம்பு

வரிதசக்கம் = எலும்பு

வரிச்சுருள் = செவ்வட்டை

வருணம் = வைரம்

வரைக்குடிலம் = சிலாவங்கம்

வலம்புரி = சங்கு

வலயமெனுங்கல் = படிகம்

வல்னூகம் = கரடி

வல்லமாக்கல் = மாக்கல்

வம்புநிறம் = மாந்துளிர்ககல்

வழலை = சவுக்காரம்

வளர்ந்தகல் = படிகம்

வளை = சங்கு

வளையில் குடியோன் = எலிமுள்

வன்மலையில் தங்கம் = சாளிக்ராமம்

வன்னி = சவுக்காரம்

வஸ்துவுப்பு = அமுரியுப்பு

வா

வாசம் = மீனம்பர்

வாணலிங்கம் = கொண்டகச்சிலை

வாணிச்சிமேனி = சிவப்பு

வாதசிரோமணி = நவச்சாரம்

வாதகருக்கல் = சிலாநாகம்

வாதஆதி = சவுக்காரம்

வாதமுடிப்போன் = சவுக்காரம்

வாதத்தின் தலைவன் = சவுக்காரம்

வாததத்தை சமக்கியுண்டோன் = நவச்சாரம்

வாதத்தின் பிரட்டுக்கல் = ராஜவர்த்திக்கல்